சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சொத்தானது ஆதியில் பெருமாள் தேவருக்கு பாத்தியப்பட்டது என வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பெருமாள் தேவருக்கு பொன்னுபெருமாள் தேவர், சுப்பையா தேவர், அருணாசல தேவர், வெளியப்பத் தேவர் என 4 வாரிசுகள் என என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பெருமாள் தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது மகன்கள் தலா 1 ஏக்கர் 41 சென்டை பிரித்து கொண்டதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொன்னுபெருமாள் தேவருக்கு சுப்பையா தேவர், சித்திரை வேல் தேவர் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு இறந்து விட்டதாக வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொன்னுபெருமாள் தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது வாரிசுகள் இருவரும் பிரித்து கொண்டால் தலா 70.5 செண்டு கிடைக்கும் என்றால் அது பற்றி தெரியாது. சுப்பையாதேவருக்கு காசிபாண்டியன் மட்டும் தான் வாரிசு என்றால் அது பற்றி தெரியாது. சித்திரைவேல் தேவருக்கு வெளியப்பத்தேவர், பொன்னுச்சாமி தேவர், செல்லையா தேவர் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. சித்திரை வேல் தேவருக்கு 3 வாரிசுகள் உள்ளனர் என்றும் சரிசமமாக பிரித்தால் ஒவ்வொருக்கும் 23.5 செண்டு பாகமாக கிடைக்கும் என்றால் அது பற்றி தெரியாது. பெருமாள் தேவர் மகன் வெளியப்ப தேவருக்கு யார் யார் வாரிசுகள் என வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை.

வெளியப்பதேவருக்கு செல்லையா தேவர், வழியடிதேவர், செந்துர் பாண்டியன், வெள்ளப்பாண்டியன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் தெரியாது. வெளியப்பத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது வாரிசுகள் பிரித்து கொண்டால் தலா 30.5 செண்ட் மட்டுமே கிடைக்கும் என்றால் தெரியாது. அருணாசலதேவருக்கு ராமர் தேவர் மட்டும் தான் வாரிசு என்றால் தெரியாது. பெருமாள் தேவர் மகன் சுப்பையா பாண்டியனுக்கு ராமர் தேவர் மட்டுமே வாரிசு என்றால் அது பற்றி தெரியாது. கருப்பசாமியுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் எத்தனை நபர்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் இறந்து விட்டார்கள். வா.சா.ஆ 8 ஆவணம் 14.11.1968 ல் ராமு அம்மாளுக்கு வழியடித்தேவர், செந்தூர்பாண்டியன், பொன்னுபெருமாள் தேவர் மகனான சித்திரைதேவர் மகன் வெளியப்பத் தேவர், பொன்னுச்சாமி தேவர். செல்லையா தேவர் ஆகியோர்கள் 70.5 செண்டை ராமு அம்மாளுக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 6.9.1973 ம் தேதியில் சாயக்கடை வெளியப்பத்தேவர் காசிப்பாண்டியன், கருப்பசாமி ஆகியோர்ரகளிடம் 25 செண்டை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ 6 ன்படி தற்போது வரை வெளியப்பத்தேவர் பெயரில் தான் சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. வெளியப்பத்தேவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 5 ஆண்களும், 2 பெண் மக்களும் இருந்தார்கள். அவர்களது பெயர் எனக்கு தெரியாது. அவர்களது பெயர் சண்முகசுந்தரம், துரைப்பாண்டியன், செல்வராஜ், முத்தையா சாமி, அன்னகொடி, தாயத்தாள், பாக்கியத்தாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் தெரியாது. அவர்களது இடம் தனியாக உள்ளது. வெளியப்பத்தேவர் ஆவணம் பிறப்பிக்காமல் இறந்துவிட்டதால் அவரது

மகன்கள் மற்றும் மகள்களுக்கு பங்கு சரிசமமாக கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. வெளியப்பத்தேவர் வாரிசுகள் வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், அவர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல. வெளியப்பத்தேவர் மகன் சுப்பராஜ் இறந்து விட்டார் என்றால் சரிதான். சுப்பராஜ்க்கு மனைவி , ஒரு மகள், ஒரு மகன் ஆகியோர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். சுப்பராஜ் மனைவி பெயர் வெள்ளதாய். மகன் பெயர் விஜயக்குமார், மகள் பெயர் தர்மராசத்தி என்றால் மனைவி பெயர் வெள்ளதாய் என்று தெரியும். 6ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் இவ்வழக்கிற்கு அவசியதரப்பினர்கள் என்றும், அவர்களை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 கூட்டு பட்டாவில் 7 நபர்கள் பெயர்கள் உள்ளது என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ 3 ஆவணத்தில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து என சொல்லப்படவில்லை என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ 4 ஆவணத்தில் 6 நபர்கள் பெயர் உள்ளது என்றும், யார் யாருக்கு எவ்வளவு சொத்து என சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி தெரிய வில்லை. தபசில் சொத்தானது புல எண். 205/1 என்பது எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 4 வருடத்திற்கு முன்பு உட்பிரிவு செய்யப்பட்டது. வழக்கில் 1 ஏக்கர் 30.5 செண்டு எனக்கு பாத்தியப்பட்டதாகும். அந்த சொத்திற்கு நான்கு எல்கை மால் தெரியுமா என்றால் ஆவணங்களில் உள்ளது. என் பெயரில் வழக்கு சொத்தை பொறுத்து தனிபட்டா வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. மருதகுட்டி தேவர் மகன் முத்தையா தேவர் எனக்கு பெரியப்பா அல்லது சித்தப்பா கிடையாது என்றால் சரிதான். மருதகுட்டி மகன் முத்தையா

தேவருக்கு வழக்கு 3 ம்லக்க சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் அது பூர்வீக சொத்தாக இருக்கலாம். வழக்கு 3 லக்க சொத்தை பொறுத்து ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 3 லக்க சொத்து மொத்த எவ்வளவு செண்டு என்றால் தெரியாது. 5 ம் பிரதிவாதி செந்தூர்பாண்டியனுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் அவரது பெயர் ஞாபகமில்லை. அவருடன் பிறந்தவர்கள் முருகையா மற்றும் இரண்டு பெண் வாரிசுகள் உண்டு என்றால் ஞாபகமில்லை. அவர்கள் இந்த வழக்கிற்கு அவசியதரப்பினர் என்றும், அவர்களை கட்சி சேர்க்காத இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித பிரச்சனை செய்யகூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4 வருடத்திற்கு முன்பு காவல்துறையில் புகார் அளித்தேன். காவல்துறையில் புகார் கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 7 முதல் 11 பிரதிவாதிகள் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு வழக்கு 5 ம்லக்க சொத்து பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் தெரியவில்லை. 11 ம் பிரதிவாதி சின்ன கடற்கரை வழக்கு நிலுவையில் இருந்த போது இறந்து விட்டார் என்றால் சரிதான். அந்த சின்னகடற்கரைக்கு 6 முதல் 10 பிரதிவாதிகள் வாரிசுகள் என சொல்லியுள்ளேன் என்றால் தெரியவில்லை. சின்னகடற்கரையின் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. நான் சொத்தை வாங்குவதற்கு முன்னர் மூலஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. கருப்பசாமி தேவர் பெயரில்1 ஏக்கர் 30.5

செண்டுக்கு தனிபட்டா எதுவும் கிடையாது என்றால் இருந்தது. அந்த தனிபட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எழுதிக்கொடுத்த ஆலயமணி அப்பாவிற்கு தபசில் சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், வா.சா.ஆ 6 மற்றும் வா.சா.ஆ 10 ன் மூலம் ராமு அம்மாளுக்கு எழுதிக்கொடுத்து விட்டதால் அவர்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. கருப்பசாமி பெயர் பட்டாவில் தவறாக இருந்தது என்றும் அதன் அடிப்படையில் கிரையம் பெற்ற ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 14 ஆவணம் பொன்னுசாமி தேவர் செல்லையா தேவருக்கு எழுதிகொடுத்த ஆவணத்தில் 23.5 செண்டு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும் அதற்குமேல் எவ்வித சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. சித்திரைவேல் தேவர் வாரிசுகள் பொன்னுசாமி தேவர், செல்லையா தேவர், வெளியப்பதேவர் ஆகியோர்கள் வா.சா.ஆ 8 ன் மூலம் ராமு அம்மாளுக்கு விற்பனை செய்து விட்டார்கள் என்றும், எனக்கு விற்பனை செய்த நபருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே விற்பனை செய்த சொத்தை வா.சா.ஆ 2 ன் மூலம் நான் மீண்டும் கிரையம் வாங்கியுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. 27.12.2017 ல் முருகையா கள்ளதனமாக எழுதி வாங்கிய ஆவணத்தை சான்றாவணமாக பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. இந்த வழக்கிற்கு பின்பு தான் முருகையா எழுதி வாங்கியது தெரியும் என்றும், அதனால் தான் வா.சா.ஆ 15 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 12 வில்லங்க சான்று 1.1.1987 முதல் 3.2.2019 வரைக்குள்ளது

என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ12 வில்லங்க சான்றிதழில் 2வது பதிவானது பேச்சியம்மாள் தனது மகன்களான ராஜ், சண்முகம், சுப்பிரமணியன், வேலுச்சாமி ஆகியோர்களுக்கு புல எண்.205/1ஏ மற்றும் 205/1 பி ஆகிய சொத்துக்களை 4 ஏக்கர் 20 செண்டில் பிரிவின்றி 5ல்1 பங்கு 3 ஏக்கர் 36 செண்டும், கிணற்றில் 5ல் 1 பங்கும் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ12ல் 5ம் பிரதிவாதி செந்தூர்பாண்டியன் அப்பா எந்த சொத்தையும் கிரையம் வாங்கியதாக பதிவுகள் இல்லை என்றால் தெரியவில்லை. செல்லையா செட்டியார் மனைவி ராமு அம்மாள் 3 ஏக்கர் 56 செண்டை கிரையம் வாங்கிவிட்டு அவர் விற்பனை செய்யும் போது 4 ஏக்கர் 1.1/4 செண்டை வா.சா.ஆ13ன் மூலம் அதிகமாக விற்பனை செய்துள்ளார் என்றால் தெரியவில்லை. 1ம்லக்க சொத்தை நான் ஆலயமணி, ராசாத்தி, அந்தோணி ஆகியோர்களிடம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி முருகையா மேற்படி நபர்களிடம் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி வேறு நபர்களான சுப்பையா தேவர் வாரிசுகளான ராமராஜ், மாணிக்கம் ஆகியோர்களிடம் 41 செண்ட் இடத்தை வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ3ல் சுப்பையா தேவர் மகன் வெள்ளப்பாண்டி தேவர் பெயர் உள்ளது என்றால் சரிதான். வெள்ளப்பாண்டி தேவர் பேரன் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். நான் வாங்கிய 1ம்லக்க சொத்தின் சர்வே நம்பரும், 4ம் பிரதிவாதி வாங்கிய சொத்தின் நான்கு எல்கைகள் வெவ்வேறானது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி உண்மையான உரிமையாளரிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றும், நான் தான் மோசடியாக கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சித்திரைவேல் தேவர் மகன் ஆவணங்கள் மூலம் பிரித்து கொள்ளவில்லை

என்றும் அவர்கள் எழுதி கொடுத்த ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றும், என் வழக்கு 4ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.